# 21 ஈழத்துச் சைவ ஆலயங்கள்

## 1. களுதாவளைப் பிள்ளையார் ஆலயம்

கிழக்கிலங்கையில் இயற்கை எழில் மிகுந்த களுதாவளைப் பகுதியில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றும் ஒருங்கே, இயற்கையாக அமையப் பெற்ற திருத்தலம் களுதாவளைப் பிள்ளையார் ஆலயம் ஆகும்.

### (அ) அமைவிடம்

இவ்வாலயம் மட்டக்களப்புக்குத் தெற்கே, மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் சுமார் 25 கிலோமீற்றர் தூரத்தில் களுதாவளைப் பகுதியில் அமைந்துள்ளது. இவ்வாலயம் கிழக்கே தீர்த்தக்கேணியையும், தாமரைத் தடாகத்தையும், மேற்கே மட்டக்களப்பு வாவியையும் வயல் வெளியையும், ஏனைய இரு திசைகளிலும் வயல் வெளிகளையும் கொண்டுள்ளது. மருதமரம், தென்னைகு, வில்வம், மா என்பன நிறைந்த சோலையின் மத்தியில் விநாயகப் பெருமான் கோயில் கொண்டுள்ளார்.



### (ஆ) ஆலய வரலாறு

களுதாவளைப் பிள்ளையார் ஆலயம் பழமையான வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயமாகும். இவ்வாலயத்தின் தோற்றம் பற்றி **களுதேவாலயக் கல்வெட்டு** எடுத்தியம்புகின்றது. இவ்வாலயம் அமைந்துள்ள இடம், முன்னர் அடர்ந்த காட்டுப்பகுதியாக இருந்தது. இங்கு வேடர்களின் தலைவனான களுவன் என்பவன் வேட்டையாடுதற் பொருட்டு வந்தான். வெற்றிகள் கிடைக்கவும், காரியம் நிறைவேறவும், இறைவனது துணையை நாடி **வெள்ளிலைச் சடங்கு** (வெற்றிலையைக் கொண்டு செய்யப்படும் சடங்கு) செய்வதற்கு இவ்விடத்தைத் தெரிவு செய்தான். பின் சடங்கினை மேற்கொண்டு அருள் பெற்றான். இவ்வாறு வேடர் தலைவனான களுவன் வழிபட்ட இடம் **களுதேவாலயம்** என அழைக்கப் பட்டது. பின்னர் அச்சொல் மருவி, **களுதாவளை** என வழங்கப்படுகின்றது.
அக்காலத்தில் கதிர்காமத் திருத்தலத்திற்கு, கால்நடையாக யாத்திரை செல்லும் அடியார்கள் தங்கிச் செல்லும் இடமாக இவ்விடம் விளங்கியது. இவ்வாறு யாத்திரை வந்த இரு இலிங்கதாரிகள் இலிங்கத்தினை நிலத்தில் வைத்துப் பூசை செய்த பின்னர், இலிங்கத்தை மீண்டும் எடுக்க முயன்ற வேளை லிங்கம் வளர்ந்து கீழ் நோக்கிப் பரவியது. அவர்கள் அதனை எடுக்க முடியாது விட்டுச்

சென்றனர். பின்னர் ஊர் மக்கள் ஒன்று கூடி, கொத்துப் பந்தலிட்டு வழிபாடு செய்து வந்தனர். இவ்வற்புத லிங்கத்தின் மகிமையைக் கேள்வியுற்ற பூபால வன்னிமை என்பவன், அச்சிவலிங்கத்தில் பிள்ளையாரின் அம்சம் இருந்ததைக் கண்டு, அதனைப் பிள்ளையாராக வழிபடுமாறு மக்களை வேண்டினான். அதனால் மக்கள் அத்திருவுருவத்தை, **சுயம்புலிங்கப்பிள்ளையார்** எனப் போற்றி வழிபட்டு வருகின்றனர்.

## (இ) ஆலய அமைப்பு

களுதாவளைச் சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயம் மடாலயக் கோயிலாகும். கருவறையில் இருந்த சுயம்புலிங்கத்தை மறைத்து, பீடம் அமைத்து அதன்மேல் பிள்ளையார் திருவுருவம் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. இவ்வாலயம் உள்சுற்றையும், பரிவார தெய்வங்களுக்கான முருகன், நாகதம்பிரான், வைரவர் ஆலயங்களையும், பலிபீடம், மகாமண்டபம், வசந்த மண்டபம், யாகசாலை, வாகனசாலை, மணித்தூண் எனும் அம்சங்களையும் கொண்டு அமைந்துள்ளது. ஆலயத்தில் முன்பிருந்த பலிபீட நந்தியை மாற்றி, அவ்விடத்தில் மூஷிகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இது கருவறையை அடுத்துள்ள மண்டபத்தில் உள்ளது. ஆலயத்தின் தென்மேற்கே நாகதம்பிரான் ஆலயமும் வட மேற்கே முருகன் ஆலயமும் அமைந்துள்ளன. ஆலய மண்டப வாயிலின் இருபுறமும் துவார பாலகர் சிற்பங்களும் ஆலயத்தின் திருக்கதவுகளுக்கு மேலுள்ள சுவரில் புராணக் கதைகளை விளக்கும் சிற்பங்களும் சிவன், பார்வதி, விநாயகர், நாரதர், முருகன் சிற்பங்களும் உள்ளன. இருபக்கச் சுவர்களிலும் சமய குரவர்களான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் எனும் நால்வரது திருவுருவங்களும் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

ஆலயத்தில் சிவன், பார்வதி எழுந்தருளி விக்கிரகங்களும், விநாயகர் எழுந்தருளி விக்கிரகமும், வள்ளி, தெய்வானை சமேதரராய் விளங்கும் முருகன் எழுந்தருளி விக்கிரகங்களும் உள்ளன. ஆலயத்தின் முன்புறத்தே தீர்த்தக் குளமும், சுவாமி இளைப்பாறும் மண்டபமும் ஆலயத்தின் தென் கிழக்கே யாத்திரிகர் மடமும், கல்யாண மண்டபமும் உள்ளன.

## (ஈ) மூர்த்திச் சிறப்பு

களுதாவளைப் பிள்ளையார் ஆலயம் அருளாட்சிமிக்க தலமாகும். அங்குள்ள பிள்ளையார் நம்பிக்கையோடு தன்னை நாடி வருவோருக்கு அருள்பாலிப்பவராக விளங்குகின்றார். இவ்வாலயத்திலே உள்ள பிள்ளையார் அற்புதங்கள் பலவற்றை நிகழ்த்தியுள்ளார். பேசாத பிள்ளைகளைப் பேசவைத்தும், நடவாத பிள்ளைகளை நடக்கவைத்தும், செவிடுகளை கேட்க வைத்தும் அருள் புரிகின்றார். 1978 ஆம் ஆண்டு வீசிய சூறாவளியின்போது இவ்வாலயத்தினைச் சூழ இருந்த பிரதேசங்கள் யாவும் அழிவுக்குள்ளாகின. ஆனால், இத்திருத்தலமானது எதுவித தாக்கமும் இன்றி கம்பீரமாக நின்றமை வியப்புக்குரியது. இது விநாயகப் பெருமானின் அருளேயன்றி வேறொன்றுமில்லை.

இவற்றோடு களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையாரின் அம்சமாக, பிரதான வீதியில் நின்று தரிசிக்கும் வகையில் மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியிலே **கல்லடிப்பிள்ளையார்** ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. வீதியில் பயணம் செல்வோரும் வாகனத்தில் வருவோரும் நம்பிக்கையோடு துதித்து, சிதறுதேங்காய் உடைத்தும் கற்பூரம் கொளுத்தியும் காணிக்கைச் செலுத்தியும் சித்திகாரராகிய விநாயகரிடம் அருள் பெறுகின்றனர்.

## (உ) தலச் சிறப்பு

இவ்வாலயத்தில் நாளாந்தம் நூற்றுக்கணக்கான அடியவர்கள் பொங்கலிட்டு தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுகின்றனர். நேர்த்திக்கடனாக பெறுமதியான பொருட்களை ஆலயத்திற்கு வழங்குவதும், தாங்கள் வேண்டிய காரியம் நிறைவேறியதன் பொருட்டு, 1008 சங்குகளுடன் கூடிய சங்காபிஷேகம், 108 சங்குகளுடன் கூடிய சங்காபிஷேகம், ஸ்நபநாபிஷேகம், ருத்ராபிஷேகம் முதலானவற்றை நிறைவேற்றுவதும் அடிக்கடி நடைபெறும். அத்துடன் குழந்தைகளைப் பெற்றோர் பிள்ளையாரிடமிருந்து விலை கொடுத்து வாங்குதல், குழந்தைகளுக்கு அமுதூட்டுதல் என்பன இவ்வாலயத்தில் நாளாந்தம் மத்தியானப் பூசையின்போது நடைபெறுகின்றன. இவ்வாலயத்தின் தலவிருட்சம் வில்வ மரமாகும். இது ஆலயத்தின் வட திசையில் உள்ளது.

## (ஊ) பூசைகளும் விழாக்களும்



இவ்வாலயத்தில் நித்திய கிரியைகளும், நைமித்திய காமிகக் கிரியைகளும் மிகச் சிறப்பான முறையிலே நடைபெறுகின்றன. இவ்வாலயத்தில் நடைபெறும் வருடாந்த மகோற்சவ உற்சவத் திருவிழா மிகச் சிறப்பானது. வருடா வருடம் ஆனி உத்தரத்தில் தீர்த்த உற்சவம் இடம்பெறும் வகையில் ஒன்பது நாட்கள் திருவிழா நடைபெற்று, பத்தாவது நாள் தீர்த்தம் இடம்பெறும். இவ்வாலயத் திருவிழாக்களை, ஆலயத்தினை நிருவகிக்கும் ஆறு குடும்பகளின் தலைவர்களான வண்ணக்குமார் முன்னின்று நடாத்துவர். இவ்வாலயத்தின் திருவிழாக் காலங்களில் சுவாமி வீதி உலா வருகின்றமை சிறப்பம்சமாகும். இக்காலங்களில் ஆலயத்தில் சமயச் சொற்பொழிவுகள், கூட்டுப்பிரார்த்தனைகள், மேளக்கச்சேரி முதலான நிகழ்வுகளும் கரகம், பாற்காவடி, பறவைக் காவடி முதலான காவடி ஆட்டங்கள், வசந்தன், கும்மி, கற்பூரச்சட்டி ஏந்துதல், அங்கப்பிரதட்சணம் செய்தல் முதலான நேர்த்திக் கடன்களும் இடம்பெறும். இவை அடியார்களின் பக்தியை எடுத்துக்காட்டுவதாக அமையும்.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

இவ்வாலயத் திருவிழாக்களுள் **ஒன்பதாம் நாள் நடைபெறும் மாம்பழத் திருவிழா** சிறப்புடையது. திருவிழாவின்போது ஆலய முன்றலில் இடம்பெறும். **''உலகத்திற்குக் கருத்தாவானவர் அன்னையும் பிதாவும்''** எனும் கருத்தினை அடிப்படையாகக் கொண்ட நாடகம் இடம்பெறும். இந்நாடகம் பக்திபூர்வமாக நடித்துக் காட்டப்படும்.

மேலும் இவ்வாலயத்தில் விநாயகர் சதுர்த்தி, விநாயகர் சஷ்டி, கேதாரகௌரி, சிவராத்திரி முதலான விரதங்கள் சிறப்பான முறையில் அனுட்டிக்கப்படும். அவற்றோடு திருக்கார்த்திகை, திருவாதிரை, தைப்பிறப்பு, புதுவருடப்பிறப்பு முதலான தினங்களிலும் விசேட பூசைகள் இடம்பெறும். விநாயகர் சஷ்டி விரத முடிவில் காப்பறுப்பு, விநாயகர் சஷ்டி விரத ஆரம்பத்தில் கட்டிய காப்பை நீக்கி, தீர்த்த மாடல் தீர்த்தோற்சவமும், திருவாதிரை நன்னாளில் சமுத்திரத் தீர்த்தோற்சவமும் சிறப்பாக இடம்பெறும். இவ்வாலயத்தில் நாயன்மார்களது குருபூசைகள் சிறப்பாக நடைபெறுகின்றன.

## (எ) ஆலய பரிபாலனம்

மட்டக்களப்புத் தேசத்தவரின் சமுதாய அமைப்பில் தனித்துவத்திற்கு அடிப்படையாக குடிமுறைமை காணப்படுகின்றது. களுதாவளைப் பிள்ளையார் ஆலயத்திலும் குடிமுறைகளுக்கு அமைய, வண்ணக்கர்மார் நியமிக்கப்பட்டுள்ளனர். அவ்வூரிலுள்ள ஆறு குடிகளுக்கும் தலைவர்களாக ஆறு வண்ணக்குமார்களுடன் சேர்த்து மொத்தம் 19 பேரைக் கொண்ட பரிபாலன சபை உள்ளது. அது ஆலய பரிபாலனத்தைக் கவனித்து வருகின்றது. ஆலய பரிபாலனமானது கிராமம் சார்ந்தது, கிராமத்தின் கடமைகள், ஆலய நிருவாகம், ஆலய தருமம், ஆலயத்தின் புனருத்தாரணம், ஆலயத் திருப்பணி, ஆலய மானியம் என்பவை தொடர்பானதாக இப்பரிபாலனம் அமையும். இத் திருப்பணியில் களுதாவளை மக்கள் அனைவரும் ஈடுபாட்டோடு செயற்பட்டு வருகின்றனர்.

## (ஏ) நூல்கள்

இத்திருத்தலத்தின் மீது அடியார்கள் பல பக்திப் பாடல்களைப் பாடியுள்ளனர். அவற்றிலே களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் திருப்பொன்னூஞ்சல், களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் காவடிப் பாடல்கள், களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் அருட்பாமாலை முதலானவையும் சுயம்புலிங்கப் பிள்ளையார் மீது பாடி வெளியிடப்பட்ட இறுவட்டுக்களும் குறிப்பிடத்தக்கன. இவ்வாலயம் தொடர்பாக வரலாறுகள் பல எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் களுதாவளைப் பிள்ளையார் ஆலய வரலாறு பற்றிக் குறிப்பிடும் முதன்மையான நூலாக, **களுவைநகர் களுதேவாலயக் கல்வெட்டு** உள்ளது.

## (ஐ) சமூக, சமயப் பணிகள்

இத்திருத்தலம் களுதாவளைக் கிராம மக்களதும், இப்பிரதேச மக்களதும் சமூக, சமய விருத்திக்குப் பங்காற்றி வருகின்றது. இப்பிரதேசத்தில் உயர் கல்வி பெறும் மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்களை வழங்குதல், ஏழை

மாணவர்களுக்குப் பல்வேறு உதவிகளைப் புரிதல், களுதாவளை திருஞானசம்பந்தர் குருகுலத்தினை ஸ்தாபிப்பதில் முக்கிய பங்காற்றியதுடன் சமய அபிவிருத்திக்காக அறப்பணியாற்றி வருதல் என்பன குறிப்பிடத்தக்கதாகும். இவற்றுடன், ஆலயத்திற்கு காணிக்கையாக வரும் பெரிய குத்துவிளக்குகள் போன்ற பெறுமதிமிக்க பொருட்களை ஏனைய ஆலயங்களுக்கும் பாடசாலைகளுக்கும் வழங்கி சமயம், பண்பாடு, கல்வி முதலானவற்றின் வளர்ச்சிக்குத் தொண்டாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. ''மூர்த்தி சிறிது; கீர்த்தி பெரிது'' என்பதற்கேற்ப இவ்வாலயம் மேற்கூறிய பல்வேறு சிறப்புக்களையும் கொண்டு விளங்குகின்றது. வாழ்வில் ஒருமுறையேனும் இவ்வாலயத்திற்குச் சென்று தரிசித்து நற்பலன் பெறுவோம்.

## 🕮 பாடச்சுருக்கம்

- களுதாவளைப் பிள்ளையார் ஆலயத்தின் தோற்றம் பற்றி அறிய உதவும் நூல் களுதேவாலயக் கல்வெட்டாகும்.
- வேடர்களால் களுதாவளை என்னுமிடத்தில் செய்யப்பட்ட வெள்ளிலைச் சடங்கானது, வெற்றிலையைக் கொண்டு செய்யப்படுவதாகும்.
- களுதாவளை ஆலயத்தின் ஒன்பதாம் நாள் திருவிழாவில் நடத்தப்படும் மாம்பழச் சடங்கு, பிள்ளையார் மாங்கனி பெற்ற நிகழ்வையும், 'உலகத்துக்கு கருத்தா அன்னையும் பிதாவும்' என்னும் கருத்தையும் வெளிப்படுத்துகின்றது.
- களுதாவளைப் பிள்ளையார் மீது நம்பிக்கை வைத்து, அடியார்கள் வழிபாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ✍ பயிற்சிகள்

**அ. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. களுதாவளைப் பிள்ளையார் ஆலயத்தின் அமைவிடத்தைக் குறிப்பிடுக.
2. இவ்வாலயம் களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயம் என அழைக்கப்படக் காரணம் யாது?
3. இவ்வாலயத்தின் தல விருட்சத்தின் பெயரைத் தருக.
4. இவ்வாலயத்தில் இடம்பெறும் திருவிழா பற்றி சிறுகுறிப்பு வரைக.

## ௐ • செயற்பாடு

- ♦ களுதாவளைப் பிள்ளையாரின் அருள் என்னும் தலைப்பில் தகவல்களைச் சேகரித்து, வகுப்பறையில் காட்சிப்படுத்துக.
- ♦ மாம்பழத் திருவிழா என்பதன் விளக்கத்தை எழுதி காட்சிப்படுத்துக.
- ♦ களுதாவளைப் பிள்ளையார் ஆலயம் மூலம் செய்யப்படுகின்ற சமூக, சமயப் பணிகளை எழுதிக் காட்சிப்படுத்துக.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

## 2. முன்னேஸ்வரம்

ஈழத்தில் உள்ள புராதன சிவத்தலங்களுள் முன்னேஸ்வரமும் ஒன்றாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன முறையாய் அமைந்த இத்திருத்தலம் அழகேஸ்வரம் எனவும் வழங்கப்படுகிறது

### (அ) அமைவிடம்

இலங்கையின் வடமேற்குப் பிரதேசத்தில் சிலாபம் நகரிலிருந்து கிழக்கே, சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் முன்னேஸ்வரம் என்னும் புராதன சிவத்தலம் அமைந்துள்ளது.



### (ஆ) ஆலய வரலாறு

இத்தலத்தை இராமர், வியாசர் முதலியோர் வழிபட்டதாக தட்சணகைலாச புராணம் குறிப்பிடுகின்றது. குளக்கோட்டு மன்னன் அவ் ஆலயத்தைப் புனர் நிர்மாணம் செய்ததுடன், அதற்குப் பல (64) கிராமங்களை வழங்கியதாகவும் முன்னேஸ்வர மான்மியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. குளக்கோட்டு மன்னனுக்குப் பின் கோட்டை அரசன் ஆறாம் பராக்கிரமபாகு (1412 - 1467) இக்கோயிலுக்கு திருப்பணிகள் செய்ததுடன் பல கிராமங்களையும் மானியமாக அளித்துள்ளான். இதனை இக்கோயிற் கல்வெட்டுக்களின் வாயிலாக அறிய முடிகின்றது. அவ்வாறே, ஒன்பதாம் பராக்கிரமபாகு (1506 - 1517) பல கிராமங்களை இக்கோயிலுக்கு மானியமாக வழங்கியதைச் செப்பேடு குறிப்பிடுகின்றது போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் ‘டயகோடி மெலோ’ என்பவனின் தலைமையிலான படையினர் 1578 இல் முன்னேஸ்வர ஆலயத்தை அழித்துச் சூறையாடினர். அத்துடன் இத்தலத்துக்கு உரித்துடையதான வளம் மிகுந்த நிலங்களையும் அபகரித்தனர்.

போர்த்துக்கேயரின் ஆட்சியின் போது, புகழ் குன்றி நின்ற முன்னேஸ்வர ஆலயத்துக்கு, கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் (1747 - 1782) பல்வேறு திருப்பணிகளைச் செய்தான். முன்னேஸ்வர மான்மியம் பற்றி அறிந்திருந்த அம்மன்னன் போர்த்துக்கேயரால் அவ்வாலயம் தகர்க்கப்பட்டதைக் கேள்வியுற்று மனம் வருந்தினான்; சோழ நாட்டிலிருந்து சிற்பாசாரிகளை வரவழைத்துத் திருப்பணி செய்வித்தான். இவ்வாறு ஆலயத்தை நன்னிலைக்குக் கொண்டு வந்ததுடன், 1753 இல் கும்பாபிடேகமும் செய்வித்தான். ஆலயத்தில் நித்திய, நைமித்தியக் கிரியைகள் செவ்வனே நடைபெற விளைநிலங்களையும் மானியமாக அளித்தான். இதனை 1753 இல் எழுதப்பட்ட இக்கோயில் செப்பேடு குறிப்பிடுகின்றது. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலே இவ்வாலயத்துக்கு உரித்தாகியிருந்த மானிய நிலங்கள் சுவீகரிக்கப்பட்டன. எனினும் இறையருள் காரணமாக காலத்துக்கு காலம் கும்பாபிடேகங்கள் இடம் பெற்று, இன்று எவ்வித இடையூறுகளுமின்றி, சைவப் பெருமக்களின் புண்ணிய திருத்தலமாக விளங்கி வருகின்றது.

### (இ) மூர்த்திச் சிறப்பு

இவ்வாலயத்தின் இறைவன் பெயர் முன்னை நாதர். இவரைச் **சுவாம்யம் புவேஸ்வரர்** எனவும் அழைப்பர். இறைவி பெயர் வடிவாம்பிகை. இராமபிரானைப் பிடித்திருந்த பிரமஹத்தியானது அவர் முன்னேஸ்வர தலத்தை சமீபித்தவுடன் நீங்கியது. அதனால், ஆச்சரியமடைந்தார். முன்னேஸ்வர தலத்தின் பெருமையை உணர்ந்து அவ்வாலயத்துக்குச் சென்று இறைவனைப் பிரார்த்தித்து வணங்கி அருள் பெற்றதாக கைலாச புராணம் குறிப்பிடுகின்றது.

### (ஈ) தலச் சிறப்பு

புராண வரலாறுகளோடும், இலங்கை வரலாற்றோடும் இணைந்த ஆலயமாக முன்னேஸ்வரம் விளங்குகின்றது. வியாசருக்குப் பாப விமோசனம் தந்த சிறப்பும், இராமபிரானது பிரமஹத்திதோசம் நீக்கிய சிறப்பும் இத்தலத்திற்கு உண்டு. அதனால், இந்தியாவில் காசி விஸ்வநாதர் ஆலயம் எத்தகைய சிறப்பு மிக்கதோ, அத்தகைய சிறப்பு முன்னேஸ்வரம் ஆலயத்துக்கும் உண்டு எனச் சிறப்பித்துக் கூறுவர். தட்சண கைலாய மாலையில்,

> ''வாரணாசியில் செய்யப்பட்ட பாவம்
> முனீஸ்வரத்தில் நீங்கும்''

எனக் குறிப்பிட்டுள்ளமை இதன் பெருமையை உணர்த்தும்.

இவ்வாலயத்துக்கு உள்வீதி, மாட வீதி, இராஜ வீதி என மூன்று வீதிகள் உள்ளன. ஈழத்தில் அறுபத்து மூவர் எழுந்தருளி விக்கிரகங்களும், சிவசக்தி ஐக்கிய ரூபமாக உள்ள மேரு யந்திரமும் இத்தலத்திலே உண்டு. சக்தி பீடங்கள் அறுபத்து நான்கினுள் ஸ்ரீ லங்கா பீடம் எனக் கூறப்படுவதும் இத்தலமே ஆகும்.

### (உ) தீர்த்தச் சிறப்பு

முன்னேஸ்வர ஆலயத்தின் தீர்த்தம் சிலாபத்திற்கு அண்மையில் உள்ள மாயவன் ஆறு ஆகும். அதனைத் தெதுறு ஓயா எனவும் வழங்குவர். அவ் ஆற்றில் உற்பத்தியாகும் நீர் ஊற்றுக்களில் இருந்து நீர் நிறைந்து. தீர்த்தமாட வசதியை ஏற்படுத்துகின்றது. மாயவன் ஆற்றங்கரையில் செய்யும் எவ்வகைப் புண்ணியங்களும், கோடி பங்கு பலனைத் தரும். அவ்வாறே, அத்தீர்த்தக்கரையில் செய்யும் பிண்ட தர்ப்பணம், பிதிர்களுக்கு மிகப் பிரீதியாகும்.

### (ஊ) தலவிருட்சம்

இவ்வாலயத்தின் தலவிருட்சம் அரசமரம். மூன்று வீதிகளைக் கொண்ட இவ்வாலயத்தின் முன்புறத்திலுள்ள திருக்குளத்தின் கரையில் இவ் அரசமரம் உள்ளது.

## (எ) பூசைகளும் விழாக்களும்

முன்னேஸ்வரர் ஆலயத்தின் நித்திய, நைமித்தியக் கிரியைகள் சிறப்பாய் நடைபெறுகின்றன. இவ்வாலயத்தின் முக்கிய மகோற்சவம் இருப்பதேழு நாட்களுக்கு நடைபெற்று ஆவணி மாதப் பௌர்ணமி தினத்தில் தீர்த்தோற்சவத்துடன் முடிவடையும். இத்திருவிழாக்களுக்கு கோயிலின் சுற்றுப் புறத்தில் உள்ள மக்கள் மிகுந்த பக்தியோடு ஒத்துழைப்பு நல்கி வருகின்றனர். இலங்கையிலுள்ள சிவாலயங்களில், சைவ சமயத்தின் நிலை பேற்றுக்காக, இறைவனின் இருப்பை வெளிப்படுத்திய 63 நாயன்மார்களுக்கு விழா எடுத்துச் சிறப்பிக்கும் ஒரே ஆலயம் முன்னேஸ்வர ஆலயமாகும். இந்த விழாவினைப் **பக்தோற்சவம்** என அழைப்பர். முன்னேஸ்வர ஆலய மகோற்சவத்தில் இடம் பெறும் **வேட்டைத் திருவிழாவும்** முக்கியமானது. அன்று மாலையில் முன்னை நாதப் பெருமான், அலங்காரக் குதிரை வாகனத்திலேறி, வேட்டையாடும் நிகழ்வு இடம்பெறும். மகோற்சவ காலத்தில் இன, மத, மொழி வேறுபாடுகளின்றி, பக்தர்கள் சென்று, வழிபட்டு இன்னருளைப் பெறுகின்றனர். வேண்டுதல்களை நிறைவேற்றுகின்றனர்.

முன்னேஸ்வர ஆலயத்தில் இடம் பெறும் மற்றொரு உற்சவம் பத்து நாட்களைக் கொண்டது. அதில் வசந்த மண்டபத்திலே பூசை, ஆராதனைகள் என்பன இடம் பெறும். இவ்வாலயத்தில் இடம் பெறும் இரு மகோற்சவங்களுடன், சிவராத்திரி, நவராத்திரி, திருக்கார்த்திகை, திருவெம்பாவை, ஆருத்ரா முதலானவையும் சிறப்பு வாய்ந்தவை.

## (ஏ) நூல்கள்

முன்னேஸ்வரத் திருத்தலத்தின் மீது அருளாளர்களும் புலவோரும் பாடிய பாமாலைகள் பல உள்ளன. அவற்றுள் ஊஞ்சற் பிரபந்தங்களான முன்னீஸ்வரர் ஊஞ்சல், முன்னை நாதேஸ்வரர் திருவூஞ்சல், ஸ்ரீ முன்னநாதசுவாமி வடிவழகி அம்பாள் திருவூஞ்சல் என்பனவும், முனீசுரர் நவமணிமாலை, முன்னை நாத சுவாமி ஆசிரிய விருத்தம், வடிவழகியம்மை ஆசிரிய விருத்தம் முதலானவையும் குறிப்பிடத்தக்கன. இவ்வாலயம் பற்றி வரலாறுகள் மான்மியங்கள் முதலானவை எழுதப்பட்டுள்ளன. அவற்றுள், முன்னேஸ்வர ஆலய வரலாறு பற்றிக் குறிப்பிடும் முதன்மையான நூலாக, ஸ்ரீ முன்னேஸ்வர மான்மியம் உள்ளது.

## (ஐ) சமூகமும் ஆலயமும்

ஆலயத்துக்கே உரிய பல தனித்துவமான மரபுகளையும், வரலாற்றுகளையும் கொண்ட இவ்வாலயம் தமிழ், சிங்கள மக்களின் ஒற்றுமைக்குப் பாலமாகவும் ஈழத்து மக்களின் ஆன்மீக விருத்திக்கு முன்னோடியாகவும் விளங்குகின்றது.

மேற்கூறிய பல்வேறு சிறப்புக்களைக் கொண்ட இத்தலத்திலுள்ள மாயவனாற்றில் நீராடி, அங்குள்ள இறைவன் இறைவியை வழிபட, இம்மையில் இஷ்ட சித்திகளும், மறுமையில் முத்திப்பேறும் சித்திக்கும் என்பது சைவ மக்களின் நம்பிக்கை. முன்னேஸ்வரம் சென்று, வடிவாம்பிகை சமேத முன்னைநாதரைப் பக்தியுடன், வணங்கி எமது பாவங்களைப் போக்கி, நற்பலன் பெறுவோம்.

## பாடச் சுருக்கம்

- முன்னேஸ்வர ஆலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம், தல விருட்சம் முதலான சிறப்புகளை உடையது.
- இவ்வாலயம், தொன்மங்களோடும் பழமரபுக் கதைகளோடும், வரலாற்றோடும் தொடர்புபட்டது.
- இலங்கையை ஆட்சி செய்த மன்னர்கள் பலர் முன்னேஸ்வர ஆலயத்துக்கு மானியங்களை வழங்கியுள்ளனர். இதனைச் சான்றுகள் புலப்படுத்துகின்றன.
- இவ்வாலயத்தின் மகோற்சவம் ஆவணி பௌர்ணமிக்கு முன்னுள்ள 28 நாட்களுக்கு நடைபெறும்.
- இவ்வாலயத்தைத் தரிசிப்பதன் மூலம், முத்தி கிட்டும் என்பது சைவ சமயத்தவர்களின் நம்பிக்கை.

## பயிற்சிகள்

**அ. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. முன்னேஸ்வர ஆலயத்தின் அமைவிடத்தைக் குறிப்பிடுக.
2. முன்னேஸ்வர ஆலயம் பற்றி அறிய உதவும் சான்றுகளைப் பட்டியற்படுத்துக.
3. முன்னேஸ்வர ஆலயத்தின் தீர்த்தத்தையும், அதன் சிறப்புகளையும் எழுதுக.
4. 'பக்தோற்சவம்' என்பதன் பொருளைக் கூறுக.

## ௐ செயற்பாடுகள்

- 'முன்னேஸ்வர ஆலயத்தின் சிறப்பு' என்னும் தலைப்பில் உரைச்சித்திரம் ஒன்றைத் தயாரித்து வகுப்பில் செய்து காட்டுக.
- முன்னேஸ்வர ஆலயத்தில் நிகழும் பக்தோற்சவம், வேட்டைத்திருவிழா என்பன தொடர்பான மேலதிக தகவல்களைச் சேகரித்து, வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

## 3. மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம்

இலங்கையில் பிரசித்தி பெற்ற அம்மன் ஆலயங்களில் நயினை நாகபூசணி அம்மன் ஆலயம், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம், மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம் என்பன குறிப்பிடத்தக்கவை. அவற்றுள் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் பற்றி முன்னைய வகுப்பில் கற்றீர்கள். இங்கு மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம் பற்றி கற்போம்.

### (அ) அமைவிடம்

இலங்கையின் மத்திய மலை நாட்டின் வடக்கு வாசல் எனச் சிறப்பித்துக் கூறப்படும் எழில் நிறைந்த நகரம் மாத்தளை. இது மலைகளால் சூழப்பட்டு, நீர் வளமும் நில வளமும் மிக்கதாய் விளங்குகின்றது. அந்நகரின், சுதுகங்கைச் சாரலில், ஏழு அருவிகள் நீரைக் கொட்டும் அழகுமலைக் குன்றுகளுக்குக் கிழக்கே, எழில் மிகு பிரதேசத்தில் மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம் அமைந்துள்ளது.

### (ஆ) பழமரபுக் கதை

இன்று மாத்தளை என்னும் பெயரால் வழங்கப்படும் இந்த நகரம், முன்பு **பன்னாகம்** என்னும் பெயரால் அழைக்கப்பட்டது. பல் + நாகம் பன்னாகமாகும். பன்னாகத்தில் பல தலைகளை உடைய ஒரு நாகம் இவ்வம்மனைப் பூசித்து வழிபட்டதாக பழமரபுக் கதை கூறுகிறது. இதுவே இப்பெயர் ஏற்படக் காரணம் என்பர். மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்துடன் தொடர்புடைய மற்றொரு கதையினையும் இங்கு கற்போம். முத்துமாரியம்மன் சிறுமியாகவும், பல்வேறு திருக்கோலங்களிலும் காட்சி கொடுத்து, தான் அவ்விடத்தில் எழுந்தருளி, அருள் செய்ததாகவும், தனக்குக் கோயில் அமைக்கும்படி கூறியதாகவும் பழமரபுக்கதை குறிப்பிடுகின்றது. அதனால், சிறுகுடில் அமைத்து, அதில் அம்மனுக்கு வழிபாடியற்றினர்.

### (இ) ஆலய வரலாறு

பழ மரபுக் கதைகளோடு தோற்றம் பெற்ற மாத்தளை முத்துமாரியம்மன் ஆலய வரலாறு பத்தொன்பதாம் நூற்றாண்டில் இருந்து வளர்ச்சி பெற்று வருகின்றது. ஆங்கிலேயர் ஆட்சியில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்காகத் தென்னிந்தியாவில் இருந்து தமிழர்களை அங்கு அவர்கள் அழைத்து வந்தனர். அவ்வாறு வந்த மக்கள் **பன்னகாமம்** என்ற இடத்தில் தங்கி இருந்தனர். அவ்வேளை, சிறுகுடிலில் இருந்த முத்துமாரியம்மனை நம்பிக்கையோடு வழிபட்டுவந்தனர். அதன் பின்னர் திரு. சுப்பையாபிள்ளை என்பவர் சுற்றி இருந்த நிலத்தை வாங்கி1852 இல் இக்கோயிலுக்கு மானியமாக வளங்கினார். மேலும் கோயிலைக் கட்டி நித்திய, நைமித்திய பூசைகள் சிறப்பாக நடைபெறவும் உதவி செய்தார். மாத்தளை முத்துமாரியம்மன் ஆலய வளர்ச்சியில் திரு. சுப்பையா பிள்ளைக்கு உதவியாக, இந்திய வணிகச் செட்டிமார்களும், யாழ்ப்பாண வர்த்தகர்களும் ஒத்துழைப்பு நல்கினர். வருடந்தோறும் பல திருப்பணிகளைக் கண்ட இவ்வாலயம், 1958 இல் புனருத்தாரணம் செய்யப்பட்டது. 1960 இலும், பின்னர் 1968 இலும் கும்பாபிடேகங்கள் இடம் பெற்றன. 1958 க்கும் 1973க்கும் இடைப்பட்ட காலங்களில் இவ்வாலயம் பல்வேறு வளர்ச்சிப் படிகளைக் கண்டது.

## (ஈ) ஆலய அமைப்பு

மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம் வடக்கு நோக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாலயம் கர்ப்பக்கிருகம், மகா மண்டபம், அர்த்த மண்டபம், வசந்த மண்டபம் என்பவற்றையும், ராஜ கோபுரத்தையும் கொண்டுள்ளது. கர்ப்பக்கிருகத்தில் முத்துமாரியம்மன் வீற்றிருந்து அருள் புரிகின்றார். ஆலயத்தினுள் சந்திரசேரருக்கும் சண்டேஸ்வரி அம்மனுக்கும் தனித்தனி ஆலயங்கள் உள்ளன. மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்தின் உள்ளே ஆனைமுகன், பஞ்சமுக விநாயகர், இலிங்கம், முருகப் பெருமான், விஷ்ணு, சரஸ்வதி, துர்க்கை ,மகாலட்சுமி, நடராஜப் பெருமான், மீனாட்சியம்மை, வைரவர், நந்தி நவக்கிரகங்கள் முதலிய தெய்வங்களுக்கும், நான்கு நாயன்மார்களுக்கும் சந்நிதானங்கள் உள்ளன. மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்தின் உள்ளே, மேற்குறிப்பிட்ட தெய்வங்களுக்குரிய சந்நிதானங்கள் போன்று, நாட்டார் தெய்வங்களான கருப்பண்ணசாமிக்கும் மதுரை வீரனுக்கும் சந்நிதானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆலயமானது ஆகம, சிற்ப சாத்திர விதிமுறைக்குட்பட்ட, தன்மை ஆகம சிற்ப சாத்திர விதிமுறைகளுக்கு உட்படாத தன்மை என்ற இரண்டு தன்மைகளையும் கொண்டுள்ளது.

## (உ) பூசைகளும் விழாக்களும்

வருடந்தோறும் மாசி மகத்தில் ஆலயத்தில் பஞ்சரத உற்சவம் நடைபெறக்கூடியதாக, இவ்வாலயத்தின் கொடியேற்றம் இடம்பெறும். இவ்வாலயத்தில் மகோற்சவம் இருபத்தொரு நாட்களுக்கு நிகழும். கொடியேற்றத் திருவிழாவன்று காலையில், ஆலயத்தின் கொடிச்சீலையை யானைமேல் வைத்து ஊர்வலமாக சுதுகங்கை ஆற்றுக்கு எடுத்துச் செல்வர். அதன் பின்னர் அங்கிருந்து சுதுகங்கை காளி கோயிலுக்குக் கொண்டு சென்று வழிபாடாற்றுவர். மீண்டும் அக்கொடியை மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்துக்கு கொண்டு வருவர். அதன் பின்னரே கொடியேற்றம் நிகழும். மாசி மகத்துடன் கூடிய இருபத்தோராம் நாள் காலை முதல் விசேட வழிபாடுகள் நடைபெற்று, இரவில் பௌர்ணமித் தினத்தில் சித்திரத் தேர்கள் ஐந்தும் அசைந்து வருவது கண்கொள்ளாக் காட்சியாகும். அம்பாளின் பெரிய இரதத்தினைப் பெண்களே வடம் பிடித்து இழுத்து வருவது சிறப்பம்சமாகும். உற்சவ காலங்களின் பௌத்த மக்களும் இங்கு வந்து, நேர்த்தி வைத்து, காணிக்கை செலுத்தி வழிபாடு செய்து, வருகின்றனர். இரத பவனி முடிவுற்றதும் மறுநாள் காலை தீர்த்த உற்சவமும், அதனைத் தொடர்ந்து பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும். உற்சவ காலங்களில் கதாப்பிரசங்கம், சொற்பொழிவு, கலை நிகழ்ச்சிகள் முதலானவை இடம்பெறும்.

இவ்வாலயத்தில் நித்திய பூசைகள் சிறப்பாக இடம் பெறுகின்றன. இவற்றைத் தவிர, தைப்பொங்கல், தைப்பூசம், நவராத்திரி, கந்தசஷ்டி முதலான காலங்களில் சிறப்பாக பூசைகள் இடம் பெறுகின்றன.

## (ஊ) நூல்கள்

மாத்தளை முத்து மாரியம்மன் ஆலயத்தின் மீது பல அடியவர்கள் பாடல்கள் பாடியுள்ளனர். அவர்களுள் முருகேசம்பிள்ளை என்பவர் பாடிய



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

மாத்தளை பன்னகாமம் அருள்மிகு ஸ்ரீ முத்து அம்பாள் பதிகமும், அந்தாதியும் ஊஞ்சலும் என்ற நூல் குறிப்பிடத்தக்கது.

### (எ) சமூகமும் ஆலயமும்

ஈழத்தில் மக்கள் மத்தியில் பக்தியையும் தேசியத்தையும் வளர்ப்பதில் இவ்வாலயம் முக்கிய பங்கினை வகிக்கின்றது.

மேற்கூறிய பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்டுள்ள மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்துக்குச் சென்று அங்கு நடைபெறும் மகோற்சவத்தில் பங்கு கொண்டு அம்மன் அருளைப் பெறுவோம்.

## பாடச் சுருக்கம்

- இலங்கையிலுள்ள சக்தி ஆலயங்களில் மாத்தளை முத்து மாரியம்மன் ஆலயமும் ஒன்றாகும்.
- மாத்தளை, பன்னாகம் என்றும் அழைக்கப்படும்.
- வருடந்தோறும் மாசி மகத்தில் மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்தில் தேர் உற்சவம் நடைபெறும்.
- மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்தின் தேர் உற்சவத்தின்போது ஐந்து தேர்கள் பவனி வருகின்றன.
- இவ்வாலயம் ஈழத்தில் வாழும் பல்வேறு சமயத்தவர்களாலும் வழிபடப்படும் சிறப்பு வாய்ந்தது.

## பயிற்சிகள்

**(அ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்தின் அமைவிடத்தைக் குறிப்பிடுக.
2. மாத்தளை, பன்னாகம் என அழைக்கப்படுவதற்கான காரணத்தை விளக்குக.
3. மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்திலுள்ள நாட்டார் தெய்வங்களின் பெயர்களை எழுதுக.

## ௐ செயற்பாடு

- 'மாத்தளை முத்துமாரியம்மன் ஆலய மகோற்சவம்' என்னும் தலைப்பில் மூன்று நிமிடப் பேச்சு ஒன்றினை நிகழ்த்துக.
- மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்தின் தேர்த்திருவிழா தொடர்பான தகவல்களைச் சேகரித்து, ஆக்கம் ஒன்றினைத் தயாரித்து, வகுப்பறையில் காட்சிப்படுத்துக. அதனை நேர்முக வர்ணணையாகச் செய்க

## 4. ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயம்

ஈழத்து முருகன் ஆலயங்களில் மிகவும் சிறப்பு வாய்ந்த ஆலயங்களில் ஒன்றாக விளங்குவது ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயமாகும். இந்த முருகன் ஆலயம் யாழ்ப்பாண மாவட்டத்தில் தொண்டமானாறு என்ற கிராமத்தில் ஆறும் கடலும் சங்கமிக்கின்ற எழில் நிறைந்த இயற்கைச்சூழலில் அமைந்துள்ளது.

### (அ) ஆலய வரலாறு

முருகப்பெருமான் மருதர் கதிர்காமர் என்ற முருக பக்தருக்கு ஆற்றங்கரையில் சிறுவனாக காட்சி கொடுத்த அவ்வேளை தனக்குப்பசியாக இருப்பதாகக் கூறி தனக்கும் தன்னுடன் வருகின்ற 63 பேருக்கும் அமுது படைக்குமாறு கேட்டுக்கொண்டார். இதற்கிணங்க மருதர் கதிர்காமர் ஆலம் இலைகளில் அமுதுபடைத்து வழிபட ஆரம்பித்த ஆலயமே ஸ்ரீ செல்வசந்நிதி முருகன் ஆலயமாகும். இன்றும் இவ்வாலயத்தில் அறுபத்து மூன்று ஆலம் இலைகளில்தான் நைவேத்தியம் படைக்கப்படுகின்றது. அது நோய் தீர்க்கும் அமுதாக உள்ளது.

### (ஆ) ஆகம விதிக்குட்படாத ஆலயம்

இவ்வாலயம் ஆகம விதிக்குட்படாத ஆலயமாகும். மருதர் கதிர்காமருடைய பரம்பரையினர் கதிர்காமத்து கப்புறாளைகள் போன்று மந்திரம் எதுவும் ஓதாது தமது வாயினை வெள்ளைத்துணியினால் கட்டி மௌனமாகவே பூசை செய்து வருகின்றனர். பூசை முறைகளில் மட்டுமன்றி உற்சவத்தின்போது கடைபிடிக்கப்படும் சடங்குகள் சம்பிரதாயங்களிலும் கதிர்காமக்கந்தன் ஆலயத்திற்கும் தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திற்குமிடையே நெருக்கமான ஒற்றுமைகள் காணப்படுகின்றன. மேலும் வட பகுதியில் இருந்து கதிர்காமத்துக்கு தலயாத்திரை செல்லும் அடியார்கள் செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்தே தமது தலயாத்திரையை ஆரம்பிப்பதும் வழமையான நடைமுறையாகும்.

### (இ) சித்தர்களும் யோகிகளும்

சித்தர்களும் யோகிகளும் இவ்வாலயத்திலும் ஆலயச்சூழலிலும் தங்கி வாழ்ந்து வருவதனாலும் இவ்வாலயம் சிறப்பும் மகிமையும் பெற்று விளங்குகின்றது. எமது நாட்டைச்சேர்ந்த ஞானிகள் மட்டுமன்றி வேறு நாடுகளைச் சேர்ந்த ஞானிகளும் இங்கே தவ வாழ்க்கை வாழ்ந்துள்ளனர். இலங்கைக்கு சோல்பரி யாப்பை வழங்கிய சோல்பரி பிரபுவின் மகனான பிரித்தானிய நாட்டைச் சேர்ந்த ஜே.எச். இராம்ஸ் போதம் ஆனைக்குட்டி சுவாமி என்ற பெயரிலும் மற்றும் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த நரிக்குட்டிச் சுவாமிகள் போன்றவர்களும் இவ்வாலயச் சூழலில் சிறுகொட்டில்கள் அமைத்து அங்கே தவவாழ்க்கை வாழ்ந்துள்ளனர். இதே போன்று எமது நாட்டைச் சேர்ந்த கடவுள் சுவாமி, நடராச சுவாமி, திருவாசகச்சுவாமி, சடைவரதசுவாமி, முருகேசு சுவாமிகள் போன்ற சுவாமிகள் இங்கே வாழ்ந்துள்ளார்கள். தற்பொழுதும் அருள் நிலைக்குட்பட்ட பலர் இங்கே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

## (ஈ) அன்னதானங்கள்

ஸ்ரீ செல்வசந்நிதி முருகனை அன்னதானக்கந்தன் என்னும் சிறப்புப்பெயர் கொண்டும் அழைப்பர். இங்கே வழிபட வருகின்ற அடியவர்களுக்கு அன்னதானம் வழங்குவது என்பது ஒரு சிறப்பான செயற்பாடாகும். 1970 ஆம் ஆண்டு காலக்கட்டத்தில் இங்கே 40 க்கு மேற்பட்ட அன்னதான மடங்கள் செயற்பட்டுள்ளன. இன்று சந்நிதியான் ஆச்சிரமம் உட்பட ஒரு சில மடங்களே செயற்பட்டாலும் சிறப்பான முறையில் அன்னதானச் செயற்பாட்டை மேற்கொண்டு வருகின்றன. ஆற்றில் மூழ்கி எழுந்து சந்நிதியானை மனமுருகி வழிபட்டு அதன் பின் அன்னதான மடத்திற்குச் சென்று பசி ஆறிச் செல்வதென்பது மனதிற்கு நிறைவைத்தரும்

## (உ) வழிபாட்டு முறை

சந்நிதி முருகன் மீது அடியார்கள் நெருக்கமான பக்தி கொண்டுள்ளார்கள். சிலர் அமைதியான முறையில் மௌனமாகவும் அடக்கமாகவும் வழிபாடு செய்வார்கள். இன்னும் சிலர் முருக நாமங்களை உச்சரித்தும் தேவார திருவாசகங்களை ஓதியவாறும் வழிபடுவார்கள். வேறு சிலர் உரிமையுடன் கதைத்து கண்ணீர்விட்டு தமது துன்பங்களை ஒப்புவித்து உணர்வுபூர்வமாக வழிபாடு செலுத்துவார்கள். இன்னும் சிலர் இதைவிட ஒருபடி மேலே சென்று சந்நிதி முருகனுடன் வாய்விட்டுப்பேசி, தேவை ஏற்படின் அதட்டி மிகவும் நெருக்கமான உறவுக்காரருடனோ அல்லது நண்பருடனோ உரையாடுவது போன்று தமது பக்தியை வெளிப்படுத்துவதனையும் நாம் காணமுடியும். சந்நிதியான் இவர்கள் எல்லோரது வழிபாடுகளையும் அகமகிழ்வுடன் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு அருள்பாலித்து வருகின்றான்.

## (ஊ) அற்புதங்கள்

சந்நிதி முருகனிடம் தங்களை முழுமையாக அடிமையாக்கி அவன் மீது தூய்மையான வழிபாட்டை செலுத்தி வருகின்ற அடியார்களுக்கு கலியுகக்கந்தனான முருகப்பெருமான் காட்சிகள் மூலம் பலவித அற்புதங்களை நிகழ்த்தி அவர்களை பரவசமடையச் செய்யும் நிகழ்வுகளும் இங்கே இப்பொழுதும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனால் இந்த ஆலயத்தில் எப்பொழுதும் அடியார்கள் கூட்டம் நிறைந்தே காணப்படும்.

## (எ) தலவிருட்சம்

ஐராவசு என்ற முனிவர் தவமிருந்து முத்தியடைந்த இடத்தில் வளர்ந்துள்ள பூவரச மரமே இவ்வாலயத்தின் தலவிருட்சமாகும். பூவரச மரத்தின் கீழ் அடியார்கள் மௌனமாக இருந்து வழிபாடு செய்து அமைதியும் சாந்தியும் பெற்று வருகின்றனர்.

## (ஏ) பூசைகளும் விழாக்களும்

ஆலயத்தில் நித்திய நைமித்திய பூசைகள் இடம் பெறுகின்றன. வாய்கட்டி மந்திரங்கள் இன்றி 63 ஆலம் இலைகளில் பொங்கல் படைத்து நித்திய பூசை நடைபெறும். ஆவணிப் பௌர்ணமியன்று தீர்த்தம் வருமாறு மகோற்சவம் நடைபெறும்.

### (ஐ) நூல்கள்

அருட்கவி சீ. விநாசித்தம்பி எழுதிய செல்வச் சந்நிதிதலபுராணம், ஆற்றங்கரையான், சந்நிதிச் செல்வம். திருப்பள்ளி எழுச்சி, திருவூஞ்சல் செல்வச் சந்நிதி அகவல், திருச்சந்திப்பதிகம், திருச் சந்நிதி தோத்திர மாலை எனப் பல நூல்கள் முருகன் புகழ் போற்றுகின்றன.

## பாடச் சுருக்கம்

- யாழ்ப்பாணத்தின் வடக்கே தொண்டமானாற்றில் அமைந்த முருகன் ஆலயம் செல்வ சந்நிதியாகும்.
- இவ்வாலய பூசகர் வாயை துணியால் கட்டி 63 ஆலமிலையில் அமுது படைத்து பூசைகள் செய்கிறார்.
- கதிர்காமத்திலிருந்து கொண்டு வந்த வெள்ளிவேல் மூலஸ்தானத்தில் உள்ளது. அதனால் சின்னக்கதிர்காமம் என்றழைக்கப்படும்.
- ஐராவசு தவமிருந்து வழிபட்ட பழமையான பூவரசமரம் தலவிருட்சமாகும்.
- ஆவணி பௌர்ணமியில் தீர்த்தம் நடைபெறுமுகமாக 15 தினங்கள் மகோற்சவம் நடைபெறும்.
- அன்னதானக்கந்தன் என்பதற்கேற்ப பல அன்னதான மடங்கள் காணப்படுகின்றன.

## பயிற்சிகள்

**அ. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

(1) செல்வச்சந்நிதி ஆலயம் எங்கே அமைந்துள்ளது?

(2) செல்வச்சந்நிதி ஆலயத்துடன் தொடர்புடைய முருகன் ஆலயம் எது?

(3) இத்தலத்திலிருந்து தவவாழ்க்கை மேற்கொண்ட மேல் நாட்டவர் யாவர்?

(4) இத்தலத்திலுள்ள பிரதான ஆச்சிரமம் யாது.

(5) இத்தலத்தில் அடியார்கள் வழிபடும் இரண்டு முறைகளைத் தருக.

## ௐ செயற்பாடு

♦ ''தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயம்'' என்ற தலைப்பில் ஐந்து நிமிடமளவில் பேச்சு ஒன்றை நிகழ்த்துக.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

## 5. வெருகல் சித்திர வேலாயுதர் ஆயலம்

செல்வச் சந்நிதி முருகன் ஆலயம் பற்றி கற்ற நாம் இங்கு வெருகல் சித்திர வேலாயுதர் ஆலயத்தின் பல்வேறு சிறப்பம்சங்களையும் கற்போம். இந்த ஆலயம் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் எல்லைக் கோயிலாக அமைந்துள்ளது.

### (அ) அமைவிடம்

வெருகல் சித்திர வேலாயுதர் ஆலயம், மட்டக்களப்பு மாவட்டத்தின் வட எல்லையில் மகாவலி கங்கையின் ஒரு கிளையான வெருகல் ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. வயல்வெளிகளுக்கு மத்தியில் இயற்கை எழில் நிறைந்த இடத்தில் வெருகல் சித்திர வேலாயுதர் ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்தின் எதிரே தாமரைத் தடாகமும், ஆலயத்தைச் சூழ ஆல், வில்வை, மதுரை, இலுப்பை முதலான விருட்சங்களும் உள்ளன.

கதிர்காமத்துக்குப் பாத யாத்திரை செல்வோர் தங்கி, தரிசித்துச் செல்லும் தலமாக இவ்வாலயம் விளங்குகின்றது. கதிர்காமத்தில் மாணிக்க கங்கை, கதிரைமலை, வள்ளிமலை என்பன அமைந்திருப்பது போல, இங்கும் வெருகல் கங்கை, வெருகல் மலை, படிவெட்டு மலை என்பன அமைந்துள்ளது. இது கதிர்காமத்தை நினைவூட்டுவதனால், இத்தலத்தை ‘‘**உபய கதிர்காமம்**’’ என மக்கள் போற்றி வழிபடுகின்றனர்.

### (ஆ) மூர்த்தி, தீர்த்தம்-

இவ்வாலயத்தின் இறைவன் வள்ளி, தெய்வானை சமேத சித்திர வேலாயுத சுவாமி. இவ்வாலயத்தின் தீர்த்தம் வெருகல் (கங்கை) ஆறு ஆகும்.

### (இ) கர்ண பரம்பரைக் கதை

இவ்வாலயத்தின் வரலாறு பற்றிய கர்ண பரம்பரைக் கதைகள் இதன் தொன்மையைக் காட்டுவதாக உள்ளன. அவ்வாறான கதையொன்றினை இங்கு நோக்குவோம். இப்பிரதேசத்தில் வெருகல் சித்திர வேலாயுத சுவாமி ஆலயம் தற்போது உள்ள இடத்தில் ஓர் ஆலமரத்தடியில் இருந்தது என்றும், அந்த ஆலமரப் பொந்தில் வேல் ஒன்று இருந்தது என்றும் கூறப்படுகிறது. அந்த வேலுக்கு மக்கள் பூசை, வழிபாடுகளைச் செய்துவந்தனர். தனது நோய் நீங்குவதற்காக இந்தியாவிலிருந்து வந்து இப்பாதை வழியே கதிர்காமத்துக்கு யாத்திரை சென்றார் செட்டியார் ஒருவர் வழிபட்டு வந்த செட்டியார் ஒருவர் வேல் இருந்த ஆலமரத்தின் நிழலில் களைப்பால் நித்திரையாகி விட்டார். அப்போது கனவில் கதிர்காமக் கந்தன் தோன்றி, அவ்விடத்தில் தனக்கு ஓர் ஆலயம் அமைக்கும்படி அருளாணையிட்டார். அதன்படியே செட்டியார் அங்கு ஆலயத்தை அமைத்தார்.

ஆலயம் அமைப்பதற்கான திரவியம் அங்குள்ள **கல்மலை** என்ற இடத்தில் இருப்பதாக செட்டியார் அறிந்து அம்மலையிலிருந்த திரவியத்தைப் பெற்றார். அதனைக் கொண்டு கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம் என்பவற்றைக் கொண்ட ஆலயத்தைக் கட்டிமுடித்தார். அதன் பின் இந்நாட்டு மன்னனிடம் இருந்து ஏழு மாணிக்கக் கற்களைப் பெற்றார். அவற்றை அவ்வாலயக் கருவறையில் யந்திரத்தின் கீழ் வைத்து, முருகப் பெருமானைப் பிரதிட்டை செய்து, வழிபட்டு வந்தார். இவ்வாறு ஆலயத்தை அமைத்தவர் நல்லைநாதச் செட்டியார் என அக்கதையில் கூறப்பட்டுள்ளது. இந்த ஆலயத்தின் திருப்பணியை நிறைவேற்றிய செட்டியார் கும்பாபிஷேகம் செய்வித்தபோது, மாணிக்கக் கற்களைக் கொடுத்துதவிய மன்னனையும் அதற்கு அழைத்திருந்தார். மன்னன் வரும் வழியில் நெற்கதிர்களால் பந்தல் அமைத்து வரவேற்றார். அந்த இடத்திற்குக் **கதிர்வெளி** எனப் பெயர் சூட்டப்பட்டது. இப்போது அச்சொல் மருவி கதிரைவெளி என வழங்கப்படுகிறது.

இக்கதையின் மூலம் இவ்வாலயம் ஒரு வணிகச் செட்டியாரால் அமைக்கப்பட்டதெனலாம். அதற்கு அனுசரணையாக வெருகல் பதிக்கு அண்மையில் இலங்கைத்துறை முகத்துவாரம் அமைந்திருப்பதும், அத்துறைமுகத்துக்கு வணிகக் கப்பல்கள் வந்து செல்வதும் சான்றாகின்றன. அதன் காரணமாகவே, ஆதியில் இத்துறைமுகம், **'லங்கா பட்டினம்'** என அழைக்கப்பட்டது.

### (ஈ) ஆலய வரலாறு

திருகோணேஸ்வரத்திற்குத் திருப்பணி செய்த குளக்கோட்ட மன்னன் கந்தளாய்க் குளத்தைக் கட்டிப் பல ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணிகளுக்கு நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்தினான். இவ்வாறு உருவாக்கிய பிரதேசம் **கொட்டியாரம்** என அழைக்கப்பட்டது. அம்மன்னன் அங்கு விவசாயம் செய்ய சிந்து நாட்டிலிருந்து குடிகளைக் கொண்டுவந்து தம்பலகாமம் முதல் வெருகல் வரை குடியமர்த்தினான். இந்தியாவிலிருந்து குளக்கோட்டு மன்னனால் அழைத்து வரப்பட்ட தனியுண்ணாப் பூபாலவன்னியன் இப்பகுதியை மேற்பார்வை செய்தான். வெருகல் சித்திர வேலாயுதர் ஆலயத்தைப் பராமரிக்கும் பொறுப்பு அவனிடமே விடப்பட்டிருந்தது.

இவ்வாலயத் திருப்பணியில் பல்வேறு பிரதேசத்தவர்கள் தொடர்புபட்டிருந்தனர். இதனைப் பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த இவ்வாலயத்தின் சாசனம் குறிப்பிட்டுள்ளது. இந்த ஆலயத்தின் வரலாற்றை அறிய உதவும் நூல்களில் தம்பலகாமத்தைச் சேர்ந்த வீரக்கோன் என்னும் புலவர் பாடிய பாடல்கள் குறிப்பிடத்தக்கவை. அப்பாடலில்,

- பூபால வன்னியன் ஆலயத்துக்கு வழங்கிய நன்கொடை
- கண்டி நகர் மன்னன் கனகமுடிராசன் இவ்வாலயத்தைத் தரிசித்தமை
- சித்திர வேலாயுத தேவன் செய்த தொண்டு
- செட்டி வம்சத்திலுள்ள பிரதானிகள் செய்த தொண்டுகள்
- நல்லை நாதச் செட்டியார் ஆலயத்தை அழகுறச் செய்தமை
- குளக்கோட்டன் செய்த தொண்டுகள்


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

போன்ற விடயங்கள் கூறப்பட்டுள்ளன குளக்கோட்டன் திருப்பணிக்குப் பின், இவ்வாலயம் காலத்துக்குக்காலம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வரப்பட்டுள்ளது.

## (உ) ஆலய அமைப்பு

இவ்வாலயத்தின் கருவறையில் வள்ளி, தெய்வானை சமேத சித்திரவேலாயுதப் பெருமான் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளார். மகா மண்டபத்தில், உள்ள மகாவல்லி, கஜவல்லி சமேதகராக ஆறுமுகப்பெருமான், உமையம்மை சமேத சந்திரசேகரர் மூர்த்தங்கள் தெற்கு வாசல் நோக்கி மயூரம், பலிபீடத்துடன் ஸ்தம்ப மண்டபம் உள்ளது. பரிவார மூர்த்திகளான விநாயகரும் பைரவரும் தனிக்கோயில்களில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளனர்.

சித்திர வேலாயுதர் ஆலயத்தின் தென்புறத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட கதிர்காம சுவாமி கோயில் உள்ளது. அதன் மூலஸ்தானத்தில் முருகன் திருவுருவமோ, வேலோ பிரதிட்டை செய்யப்படாது, அட்சர மந்திரம் எழுதி வைக்கப்பட்ட பேழை பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. இக்கோயிலுக்குச் சற்றுத் தூரத்தில் காவடிப்பிள்ளையார் கோயில் உள்ளது. கோயிலின் கிழக்குத் திசையில் வீரபத்திரர் கோயில், தாமரைக்குளம், சூரன் கோட்டை என்பன அமைக்கப்பட்டுள்ளன.

## (ஊ) பூசைகளும், திருவிழாக்களும்

இவ்வாலயத்தில் நித்திய, நைமித்திய பூசைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. வருடாந்த உற்சவம் ஆவணி உத்தரத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 18 நாட்கள் திருவிழா நடைபெறும். இறுதித் திருவிழாவான வேட்டைத்திருவிழா செட்டிமார்களால் நடாத்தப்படுவதால், 'செட்டித் திருவிழா' என்பர் அதற்கு அடுத்த நாள் **'தீக்குளிப்பு'** என்னும் தீப்பாய்தலும் அதனை அடுத்து வெருகல் நதியில் தீர்த்தோற்சவமும் நடைபெறும். இவ்வாலய விழாக்காலங்களில் மூவின மக்களும் பக்தியுடன் கலந்து கொண்டு வழிபாடுகளை மேற்கொள்ளுகின்றனர்.

மகோற்சவத்தைப் போன்று, விசேட தினங்களான தைப்பொங்கல், சிவராத்திரி, சித்திரைப் புத்தாண்டு, வைகாசி விசாகம், ஆடி அமாவாசைத் தீர்த்தம், கந்தசஷ்டி, திருக்கார்த்திகை விளக்கீடு, திருவெம்பாவை போன்றனவும் இவ்வாலயத்தில் சிறப்பாக இடம் பெறுகின்றன.

## (எ) ஆலய நிருவாகம்

குளக்கோட்டு மன்னனின் காலத்து ஏற்பாடுகளுக்கு அமையவே இன்றும் இவ்வாலயத்தில் நிருவாகமும் தொண்டுகளும் நடைபெறுகின்றன. கோவில் விதானை, கங்காணம், உண்டியல் கங்காணம் என்னும் முகாமையாளர் பண்டைய நிருவாக முறை இன்றும் இவ்வாலயத்தில் பின்பற்றப்படுகின்றது.

## (ஏ) நூல்கள்

வெருகலம்பதி தலத்தின் மீது பல புலவர்கள் பாடல்கள் பாடியுள்ளனர். அவற்றுள் தம்பலகாமத்தைச் சேர்ந்த வீரக்கோன் என்னும் புலவர் பாடிய ''வெருகல் சித்திர வேலாயுதர்'' எனும் பதிகம் குறிப்பிடத்தக்கது. உபய கதிர்காமம் என்று சிறப்பித்துக் கூறப்படும் வெருகல் சித்திர வேலாயுதர் ஆலயத்தைத் தரிசித்து, இறையருள் பெறுவோம்.

## 🕮 பாடச் சுருக்கம்

- வெருகல் சித்திர வேலாயுதர் ஆலயம், உபயகதிர்காமம் எனவும் போற்றப்படுகின்றது.
- மகாவலி கங்கையின் கிளைநதியான வெருகல் கங்கையின் கரையோரத்தில் வெருகல் சித்திர வேலாயுதர் ஆலயம் அமைந்துள்ளது.
- இவ்வாலயத்தை முதலில் அமைத்தவர் நல்லை நாதச் செட்டியாராவர்.
- குளக்கோட்டு மன்னன் இவ்வாலயத்தின் மேற்பார்வைப் பணியைத் தனது பிரதிநிதி மூலம் செய்தான்.
- இவ்வாலயத்தின் சிறப்பினை, இவ்வாலயத்துடன் தொடர்புடைய சாசனம் குறிப்பிடுகின்றது.

## ✍ பயிற்சிகள்

**அ. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. வெருகல் சித்திர வேலாயுதர் ஆலயத்தின் அமைவிடத்தைக் குறிப்பிடுக.
2. இந்த ஆலயத்துடன் தொடர்புடைய கதையினைச் சுருக்கமாக தருக.
3. இந்த ஆலயத்தின் மூர்த்தி, தீர்த்தம் என்பவற்றைத் தருக.

## ௐ ஆ. செயற்பாடுகள்

- இவ்வாலயம் 'உபய கதிர்காமம்' என அழைக்கப்படுவதற்கான காரணங்களைத் தேடி, ஆக்கம் ஒன்றைத் தயாரித்துக் காட்சிப்படுத்துக.
- 'சித்திர வேலாயுதர் ஆலய மகோற்சவம்' தொடர்பான தகவல்கள், படங்களைச் சேகரித்து வகுப்பில் காட்சிப்படுத்துக.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

## 6. பொன்னாலை வரதராசப் பெருமாள் ஆலயம்

காத்தல் கடவுளாகிய மகாவிஷ்ணுவுக்கு பல ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் வல்லிபுர ஆழ்வார் ஆலயம், வண்ணை வெங்கடேச வரதராசப் பெருமாள் ஆலயம், பொன்னாலை வரதராசப் பெருமாள் ஆலயம் என்பன சிறப்பானவை. இவற்றில் பொன்னாலை வரதராசப் பெருமாள் ஆலயம் பற்றி இங்கு படிப்போம்.



### (அ) அமைவிடம்

யாழ்ப்பாணத்திற்கு வடமேற்கே ஏறக்குறைய 20 கிலோ மீற்றர் தொலைவில் பொன்னாலை என்னுமூரில் பொன்னாலை வரதராசப் பெருமாள் ஆலயம் அமைந்துள்ளது.

### (ஆ) ஆலய வரலாறு

இவ்வாலய வரலாறு பற்றி தட்சிண கைலாய புராணத்திலே பொன்னாலை பெருமை உரைத்த படலத்தில் கூறப்பட்டுள்ளது. முன்னோரு காலத்தில் இந்திரன் துருவாச முனிவரின் சாபத்தைப் பெற்றான். இதனால் துன்பப்பட்ட இந்திரன் துருவாச முனிவரை இரந்து சாபவிமோசனம் கேட்ட போது துருவாசர் நீ இலங்கைக் கடற்கரையில் வலைஞனாகப் பிறப்பாய். நாராயணன் அருளால் சாபம் நீங்கும் என்றார். இந்திரன் பொன்னாலைப் பகுதியில் வலைஞனாகப் பிறந்தான். ஒருநாள் பொன்னாலைக் கடலில் வலைவீசிய போது வலையில் ஓர் ஆமை அகப்பட்டது. அவ் ஆமையைக் கைகளால் தொட்ட போது சாபவிமோசனம் பெற்றான். மகிழ்ச்சியோடு அவ் ஆமையைக் கரைக்கு கொண்டு வர முயற்சித்தான். முடியவில்லை. அருகில் நின்ற வலைஞர்களை அழைத்து கரை சேர்க்க முற்பட்ட போது ஆமைக்கு மேலே வானத்தில் பொன்னொளி வீசும் விமானம் ஒன்று காணப்பட்டது. இந்திரன் அவ்விமானம் மூலம் தேவ உலகை அடைந்தான். இவ்வாமை கல்லாகி விட்டது. இவ்வதிசயத்தைப் பார்த்த எல்லோரும் வியப்படைந்தார்கள். இவ்வாமை நாராயணின் அவதாரம் என்று உணர்ந்து அக்கல்லைக் கரை சேர்த்து நாராயணனுக்கு ஆலயம் அமைத்து வழிபடத் தொடங்கினார்கள்.

போர்த்துக்கேயர் காலத்தில் இவ்வாலயத்தை உடைத்து ஊர்காவற்றுறைக் கோட்டை, சங்கானைக் கோட்டை என்பவற்றை அமைத்தார்கள் என்பதிலிருந்து கி.பி 15ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட ஆலயம் என்பது அறியக்கிடக்கின்றது.

### (இ) அமைப்பு

கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், வசந்த மண்டபம், உள்வீதிச் சுற்றுப் பிரகாரம், வெளிவீதி என இரு வீதிகளையும் கொண்டு அமைந்துள்ளது. வெளிவீதிக்கு வெளியே அன்னதான மடங்கள் காணப்படுகின்றன.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

கருவறையில் மூலமூர்த்தியாக பூமிதேவி, ஸ்ரீதேவி சமேதரராக வரதராசப்பெருமாள் அமைந்து காணப்படுகின்றார். சுற்றுப்புறங்களில் பரிவார மூர்த்திகளாக மகாலட்சுமி, பூமிலெட்சுமி, கருடாழ்வார், நாகதம்பிரான், இராமன், சீதை, இலட்சுமணன், சந்தான கோபாலர், நவக்கிரகம், ஆஞ்சநேயர், அனந்த சயன மூர்த்தி, (ஸ்ரீ ரங்கநாதர்) என்பன அமைக்கப்பட்டுள்ளது. மகாமண்டபத்தில் மீனவனின் வலையில் சிக்கிய ஆமைக்கல் இன்றும் காணப்படுகிறது.

## (ஈ) மூர்த்தி

இந்திரனுக்கு சாபம் நீங்கி வரம் கொடுத்தமையால் இவ்வாலய மூர்த்தி வரதராசப் பெருமாள் என அழைக்கப்படுகின்றார். கருவறைப் போன்று வசந்த மண்டபத்திலும் ஸ்ரீதேவி பூமிதேவி சமேதரராக வரதராஜப் பெருமாள் எழுந்தருளி மூர்த்தியாகக் காணப்படுகின்றார். வல்லிபுர ஆழ்வார் கோயில் மச்ச (மீன்) அவதாரத்தோடு ஆரம்பமாகியது போல இவ்வாலயம் கூர்ம (ஆமை) அவதாரத்தோடு ஆரம்பமானது.

## (உ) தலம்

புன்னை மரங்கள் நிறைந்து காணப்பட்டமையால் புன்னாலை என்றும், நாராயணன் இந்திரனுக்குப் பொன்மயமான விமானத்தைக் காட்டியமையால் பொன்னாலயம் என்றும் பொன் என்னும் பெயருடைய இலக்குமி பூசித்த தலமாகையால் பொன்னாலை என்றும் பெயர் பெறுகிறது. ஆவணி கிருஷ்ண பட்ச அட்டமித் திதியாகிய கிருஷ்ண பகவான் அவதரித்த தினத்தில் பொன்னாலயத்தில் வாசம் செய்யும் வரதராசப் பெருமானை யாரொருவர் அன்புடன் தரிசனம் செய்கின்றாரோ அவருடைய பாவங்கள் எல்லாம் அப்பிறவியிலேயே நீங்கிவிடும். அவர் இப்பிறப்பிலேயே எல்லா நலன்களையும் அடைந்து மகிழ்ந்து மறுமையில் வைகுண்ட லோகத்தை அடைந்து இன்பமாக வாழ்வார் என்று இத்தலத்தின் பெருமையை தட்சிணகைலாய புராணம் கூறுகின்றது.

## (உ) தீர்த்தம்

திருவடி நிலை என்னும் கடற்கரையே இவ்வாலயத்தின் தீர்த்தமாகும். ஆலயத்திற்கு வடக்குப் பக்கமாக ஒரு கிலோ மீற்றர் தொலைவில் காணப்படுகின்றது. மகாவிஷ்ணு இந்திரனின் சாபம் நீக்கி அவனுக்கு இந்திரப் பதவியை மீண்டும் வழங்கிய காலத்தில் திருமாலின் திருவடிச்சுவடு பதித்த காரணத்தால் இவ்விடம் 'திருவடி நிலை' எனப்பெயர் பெறுகிறது. இத்தீர்த்தத்தில் பலர் தீர்த்தமாடிப் பாவம் போக்கி வருகின்றனர்.

## (ஊ) விருட்சம்

இத்தலத்தின் தலவிருட்சம் வன்னிமரமாகும். ஆலய உள்வீதியில் வடக்கிலும், தெற்கிலும் இரண்டு வன்னி மரங்கள் வழிபடப்பட்டு வருகின்றன.

## (எ) நித்திய பூசை

இவ்வாலயத்தில் வைகாசன ஆகம முறைப்படி தினமும் மூன்று வேளை பூசை நடைபெற்று வருகின்றது. மாலையில் நித்திய உற்சவம் நடைபெறுகின்றது.

## (ஏ) நைமித்திக பூசைகள்

ஞாயிற்றுக் கிழமைகளில் விசேட பூசைகள் நடைபெறுகின்றது. மாதந்தோறும் வளர்பிறை, தேய்பிறையில் வரும் இரண்டு ஏகாதசியிலும் விசேட பூசை, உற்சவம் நடைபெறுகின்றது. மாசி மாதத்தில் மகநட்சத்திரத்தை இறுதியாகக் கொண்டு பதினொரு தினங்கள் இலட்சார்ச்சனை நடைபெற்று வருகின்றது. சித்திரையில் மகாநவமி. ஆனி மாதத்தில் மணவாளக் கோலத்திருவிழா, ஆடிப் பூரத்தன்று நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாடல் முற்றோதல் பன்னிரு ஆழ்வார் உற்சவமும், வரலக்சுமி விரதப் பூசை, நவராத்திரி, விஷ்ணு ஆலய தீபம் என்பன நைமித்திய உற்சவமாக நடைபெறுகின்றன.

## (ஐ) மகோற்சவம்

இவ்வாலயத்தில் ஒரு வருடத்தில் இரண்டு மகோற்சவங்கள் நடைபெற்று வருகின்றன. முதலாவது இதிலே விசேட விழாக்களாக ஆவணி மாதத்தில் ஆவணி ரோகிணியன்று தேர்த்திருவிழாவும் அமையும் முகமாக 18 நாள் மகோற்சவம் ஐந்தாம் நாள் சப்பறத் திருவிழா பத்தாம் நாள் புன்னை மரத் திருவிழா, மாலை மஞ்சத் திருவிழா, பதினேழாம் நாள் தேர்த்திருவிழா அன்று நண்பகல் கிருஷ்ணன் ஆயர்பாடியில் வெண்ணெய் உண்டமையை ஞாபகப்படுத்தும் உறியடி உற்சவம் என்பன நடைபெற்று வருகின்றன. பதினேட்டாம் நாள் காலை திருவடி நிலையில் தீர்த்தோற்சவமும் இரவு கொடியிறக்கமும் நடைபெற்று வருகின்றது. மறுதினம் காலை 1008 சங்காபிஷேகம் நடைபெற்று மாலை சுவாமி பூந்தண்டிகையில் பவனி, வருவார். பின் திருக்கல்யாணம் நடைபெறும்

மற்றைய மகோற்சவம் மார்கழி மாதத்தில் வளர்பிறை ஏகாதசி அன்று தேர்த்திருவிழாவும் மறுதினம் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும் வகையில் பத்துத் தினங்கள் நடைபெற்று வருகின்றது. ஏகாதசியன்று வைகுண்ட சுவர்க்க வாயில் திறந்திருக்கும் எனும் நம்பிக்கையோடு பல அடியவர்கள் நித்திரை விழித்து வழிபாடு செய்வர். அதிகாலையில் திருவடி நிலைத் தீர்த்தத்தில் நீராடி பாரணை செய்து விரதத்தைப் பூர்த்தி செய்வர். இரவு கொடியிறக்கல் உற்சவம் நடைபெறும்.

## (ஒ) மடங்கள்

உற்சவ காலங்களில் ஆலயத்திற்கு வரும் அடியவர்களுக்கு அன்னம் பாலிக்க 5 மடங்கள் காணப்படுகின்றன. அவையாவன கண்ணன் மடம், நவாலியார் மடம், பொன்னுத்துரை மடம், 10ஆம் திருவிழா மடம், 12ஆம் திருவிழா மடம் என்பனவாகும்.

## (ஓ) நூல்கள்

தெட்சிணை கைலாய மான்மியம் பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமாள் பற்றிக் கூறுகின்றது. அருள் நலமிக்க பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமாள் பேரில் பாடிய மேலும் கீர்த்தனைகள் உள்ளன.

## பாடச்சுருக்கம்

- யாழ்ப்பாணத்தில் மேற்குத்திசையில் பொன்னாலையில் அமைந்துள்ள விஷ்ணு ஆலயம் ஆகும்.
- இந்திரனின் சாபம் நீக்கிய மகாவிஷ்ணுவைப் போற்றி வரதராசப் பெருமாள் ஆலயம் அமைக்கப்பட்டது.
- மகாவிஷ்ணுவின் அனந்த சயனக் காட்சி இவ்வாலயத்தில் சிறப்பாகக் காணப்படுகின்றது.
- இவ்வாலயத்தில் ஒரு வருடத்தில் இரண்டு முறை மகோற்சவம் நடைபெறுகின்றது.
- ஆடிப்பூர நாளை இறுதியாகக் கொண்டு 4000 திவ்வியப்பிரபந்தப் பாடல்கள் முழுவதையும் ஆண்டுதோறும் பாடி முடித்து வழிபாடு செய்கின்றனர்.
- மகாவிஷ்ணுவின் திருவடிச்சுவடு பதித்த திருவடி நிலை கடற்கரையே இவ்வாலயத்தின் தீர்த்தம் ஆகும்.

## பயிற்சிகள்

**அ. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.**

1. இவ்வாலய அமைவிடத்தைக் கூறுக.
2. இவ்வாலயம் சம்பந்தமான நூல்களைக் குறிப்பிடுக.
3. இவ்வாலய மகோற்சவம் பற்றி சுருக்கமாகக் குறிப்பிடுக.
4. திருவடி நிலையின் சிறப்பு யாது?
5. பொன்னாலை என்பதன் காரணங்களை சுருக்கமாகத் தருக.

## ௐ செயற்பாடு

♦ ''பொன்னாலை வரதராசப் பெருமாள் ஆலயம்'' என்ற தலைப்பில் ஐந்து நிமிடமளவில் பேச்சொன்றை வகுப்பறையில் நிகழ்த்துக.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக